## புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் - 2017

---

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனியவள அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பணியகத்தின் தலைவருக்கு 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையினையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை திபதிக்கு வழங்னுகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்கள் ரூபா 229,934,178 தொகையான பணியகத்திற்கு இணைக்கப்பட்ட ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைக் கம்பனியின் மொத்தப் பங்கு மூலதனத்தில் 66 சதவீத உரித்து பணியகத்திற்கு பெறப்பட்டிருந்த போதிலும், பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் அந்தக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஒன்றிணைக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 தொடர்புடைய தரப்பினருடன் உள்ள கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

பணியகத்திற்கும் ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைக் கம்பனிக்கும் இடையே காணப்பட்ட பின்வரும் தொடர்புகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) பணியகத்தின் தலைவர் உத்தியோகபூர்வ அதிகாரத்துடன் ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைக் கம்பனியின் தலைவராக இருந்தமை.

(ஆ) உரிய கம்பனியால் பணியகத்திற்காக செலவிடப்பட்ட செலவினம்

(இ) பணியகத்திற்கான ஊழியர்கள் கம்பனி ஊடாக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டமை.

(ஈ) பணியகத்தின் கடமைக்காக கம்பனியின் ஊழியர்களை ஈடுபடுத்துதல் மற்றும் கம்பனியின் கடமைகள் பணியகத்தின் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றமை.

**2.2.3 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(i) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத வேலையின் கீழ் முன்னைய ஆண்டின் போது காண்பிக்கப்பட்ட ரூபா 2,102,992 தொகை மீளாய்வாண்டின் போது மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பூர்த்தி செய்யப்படாத வேலைக்கான ரூபா 597,479 தொகை காசுப்பாய்ச்சலாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) காசுப்பாய்ச்சல் கூற்றில் காசல்லாத சீராக்கங்களின் கீழ் செயற்பாட்டு இலாபத்தில் சீராக்க வேண்டிய பிற்போட்ட வருமானம் ரூபா 3,286,893 தொகை காசுச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) இடர் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 20,562,846 தொகை, அந்த நிதியத்திற்குக் கிடைத்த வட்டி ரூபா 292,528 தொகை மற்றும் நிதியத்திலிருந்து செலுத்துதல் ரூபா 1,337,867 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக சீராக்குவதற்குப் பதிலாக ரூபா 19,517,507 தொகையான அந்த தேறிய மீதி காசுச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03**

பணியகத்திற்கு 2016 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 16,968,108 தொகையான வெளிநாட்டு மானியங்களிலிருந்து ரூபா 3,276,493 தொகை மீளாய்வாண்டின் காலக்கழிவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், வெளிநாட்டு மானியக் கணக்கில் வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கையொன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு ஆரம்பமாவது அது பாவனைக்கு எடுப்பதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னராக இருந்த போதிலும் ரூபா 456,925,092 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தின் இறுதித் திகதியில் காணப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் பணியகத்திற்கு எதிராக பதுளை பிரதேச அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளரால் தொடரப்பட்ட வழக்கின் காரணமாக செலுத்துவதற்கு ஏற்படும் என சட்ட உத்தியோகத்தரால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,136,348 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் வெளித்தரப்பினரால் பணியகத்திற்கு எதிராக 18 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் பணியகத்தால் வெளித்தரப்பினருக்கு எதிராகவும் 04 வழங்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 100 ஆம் பந்தியின் பிரகாரம் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்கீட்டுக் கொள்கை**

மீளாய்வாண்டின் இறுதியில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 3,941,549 கடன் மீதியாக காணப்பட்டதுடன் ஐயக் கடன் ஏற்பாட்டிற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைக் கம்பனியால் பணியகத்திற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2017 வரை செலவிடப்பட்ட பதவியணியினர் செலவினம், அலுவலக பழுதுபார்த்தல் மற்றும் செயற்திட்ட செலவினங்கள் முறையே ரூபா 14,832,994, ரூபா 777,059 மற்றும் ரூபா 1,618,283 தொகைகள் பணியகத்தின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணியகத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 199,962,533 பெறுமதியான காணி 2015 ஆம் ஆண்டின் போது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்ந்தும் நிலையான சொத்தாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) பள்ளேகலயில் சுனாமி சமிக்ஞை நிலையத்தை பராமரிப்பதற்காக வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலிருந்து கிடைத்திருந்த போதிலும், மீளச் செலுத்த வேண்டியதல்லாத தொகையின் மிகையான ரூபா 9,137,179 தொகை நடைமுறைப் பொறுப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ஆய்வுகூடத்தில் எஞ்சியிருந்த 23 வகைகளுக்குரிய 157 போத்தல் இரசாயனப் பொருட்கள் மீளக் கணிக்கப்பட்டு இறுதியிருப்பாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இருப்பு (புத்தகங்கள் மற்றும் வரைபடம்) | 668,527 | பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (ஆ) 395 நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் | 222,226,636 | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களுக்கான அங்கீகாரம் |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2002 ஆம் ஆண்டின் போது பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 973,143 தொகை உரிய ஆண்டுகளின் போது தீர்க்கப்படாமையின் காரணமாக பெற வேண்டிய மீதியாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனியவள அதிகாரச்சட்டத்தின் 26(1) மற்றும் 44(ஆ) பிரிவு | அரசாங்கத்திற்காக பணியகத்தால் அறவிடப்பட்ட அரசிறைப்பணம் திறைசேரிக்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கிடைத்த முறையே ரூபா 428,601,622, ரூபா 438,810,229, ரூபா 568,348,602 மற்றும் ரூபா 94,780,968 தொகைகள் திறைசேரிக்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் அனுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் | |
| (i) 9(2)(ஊ) பிரிவு | மீளாய்வாண்டில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 4,531,246,600 தொகை செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிறுத்தி வைத்தல் இலாபத்தின் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 275,406,692 தொகை திறைசேரியின் உண்டியல்களிலும், ரூபா 2,332,800,273 தொகை நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 13(8) ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டிற்காக நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் II ஆவது பகுதியின் 6(2)(அ) பந்தி | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ½ மாத சம்பளத்தின் அடிப்படையில் பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 முதல் ஒரு மாத சம்பளம் கணிப்பீடு செய்யப்பட்டமையின் காரணமாக 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,317,415 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 59,387,751 தொகை மேலதிகமாகச் ஒதுக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற 23 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 371(5) | மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாத 4,457,890 தொகையான உப கட்டுநிதி மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் வியாபாரம் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதியாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவு | பணியகத்தின் சகல பிரிவுகளுக்குமான காலாண்டு ரீதியான, அரையாண்டு ரீதியான மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்து பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய ஈஎஸ்ரீ/ரீபீஓஆர்ரீ/05/35/5 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | ஆண்டின் போது 06 வாகனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட உள்ளக பழுதுபார்ததலுக்காக கராஜின் கூறுவிலையை ஏற்றுக்கொள்வதற்கு முன்னரும் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னரும் தகைமை பெற்ற இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகார பலத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 964,950 தொகையான நுகர்வுப் பொருட்கள் இருப்பிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அகற்றுதல் தொடர்பாக 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் ரூபா 4,752,278,508 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் ரூபா 1,564,027,187 இலாபமாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 3,188,251,321 அதிகரிப்பைக் காண்பித்தது. பணியகத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 18,803,342 இனாலும் நிர்வாகச் செலவினம் ரூபா 30,732,195 இனாலும் மற்றும் வருமான வரி ரூபா 48,398,761 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், அரசிறை வருமானம் ரூபா 3,047,443,154 இனாலும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 50,851,306 இனாலும் நிதி வருமானம் ரூபா 165,046,696 இனாலும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 20,516,016 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இலாபத்தில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் பணியகத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 910,344,782 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,182,846,496 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகம் 2015 – 2017 காலப்பகுதிக்காக தயாரித்திருந்த கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டின் போது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பணியகத்தின் 11 பிரிவுகளினதும், 16 பிரதேச அலுவலகங்களினதும் பணிப்பொறுப்புக்களை உள்ளடக்கும் வகையிலும், ஒவ்வொரு பிரிவினதும் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் இலக்குகள் மற்றும் பொறுப்புக்களை வழங்கும் வகையிலும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் பணிகளுக்கிடையே புவிச்சரிதவியல் படங்களைத் தயாரித்தல், கனிய வளங்களை இனங்காணல் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் மெதுவான நிலையில் காணப்பட்டதுடன் சுரங்க அகழ்வுகள் தொடர்பான மதிப்பீடும், கனியவளங்களைத் தயாரித்தல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் வியாபாரங்களும், வணிக ரீதியான அடிப்படையில் கனியவளங்களை விடுவித்தல், பெறுமதிகளைச் சேர்த்தல் மற்றும் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்காக பயன்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற பணிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரச்சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம் பணியகத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அமுல்படுத்தும் அலகொன்று தாபிக்கப்படாமையின் காரணமாக அதிகாரச்சட்டத்தை மீறியதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பணியகம் தவறியிருந்தது.

(இ) பணியகத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலும் வருடாந்த, அரையாண்டு மற்றும் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கையைத் தயாரிப்பதற்கோ அல்லது ஒவ்வொரு பணிகளுக்கும் தேவையான கோவைகள் பேணப்படாமையின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆண்டறிக்கையில் காண்பிக்கப்பட்ட செயல்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொழில்பெறுநர் மற்றும் ஊழியர் பங்களிப்பு 3:2 விகிதத்தில் இருக்க வேண்டிய போதிலும், பணியகத்தின் தொழில் பெறுநர் பங்களிப்பு 12 சதவீதமாகவும், ஊழியர் பங்களிப்பு 10 சதவீதமாகவும் இருந்தமையால் தொழில்பெறுநர் பங்களிப்பு 3 சதவீதம் குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. ஊழியர் சேமிலாப நிதியத்திற்கான ஊழியர் பங்களிப்பு தொடர்பாக எந்தத் தகவல்களும் கணக்குக் குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிக்களப் பரிசோதனைக்காக ஊழியர்களை ஈடுபடுத்தும் போது அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் போன்ற 03 மாவட்டங்களின் 32 பிரதேச செயலகப் பிரிவுகளை மேவுகை செய்வதற்கு இரண்டு வெளிக்கள உதவியாளர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) அனுமதிப்பத்திரதாரர்களால் நிரந்தரமாக கனியவள அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அளவை விஞ்சி அகழ்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த மேலதிகமாக அகழ்வு செய்யப்பட்ட அளவிற்காக அரசிறையை அறவிடுவதற்கும், அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியமைக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பொருத்தமான முறைமையொன்றைத் தயாரிப்பதற்கும் பணியகம் தவறியிருந்தது.

(ஈ) அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் போது தேவையான சிபாரிசுகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் விண்ணப்பித்ததுடன் முழுமையான அனுமதிப்பத்திரக்கட்டணம், அனுமதிப்பத்திரம் மூலம் அகழ்வு செய்யப்படுகின்ற கனியவளத்தின் அளவின் அடிப்படையில் அறவிட வேண்டிய அரசிறைக்காக முற்பணத்தொகையும் அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அனுமதிப்பத்திரம் விநியோகிக்க முடியாதுள்ள விண்ணப்பங்களுக்குரியதாக ரூபா 255,984,868 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் பணியகத்தில் திரண்டு காணப்பட்டது. இதில் உள்ளடங்கியுள்ள 03 வருடங்களை விஞ்சிய முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 66,166,080 ஆகும்.

(உ) கனியவளங்களை போக்குவரத்துச் செய்யும் அனுமதிப்பத்திரம் வழங்குதல் பணியகத்தின் பணியாக இருந்த போதிலும், அதற்கு மேலதிகமாக மணல் அகழும் 04 செயற்திட்டங்களுக்கான அனுமதிப்பத்திரம் எழுதுவதற்காக பணியகத்திற்கு இணைந்த கம்பனியின் 16 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இந்த ஊழியர்களின் சம்பளம் உரிய கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மணல் போக்குவரத்திற்காக புதிய அனுமதிப்பத்திரம் வழங்கும் போது பழைய அனுமதிப்பத்திரம் மீளக் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் விற்பனை செயற்திட்டங்களில் லொறி வாகனங்களுக்கு விநியோகிக்கப்பட்ட போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மீளக்கையளிக்கப்படாமல் தண்டப்பணம் மாத்திரம் செலுத்தி புதிய அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட 723 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அனுமதிப்பத்திரம் மீளக்கையளிக்கப்படாமல் ரூபா 500 தொகையான தண்டப்பணம் செலுத்தி புதிய அனுமதிப்பத்திரமொன்று பெறமுடியுமாக இருந்தமையின் காரணமாக அந்த போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி கட்டுப்பாடின்றி மணல் போக்குவரத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டு முதல் பணியகத்தின் பிரதான அலுவலகம் நடாத்திச் செல்லப்படுகின்ற மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்குச் சொந்தமான கட்டிடம் சட்ட ரீதியாக கையேற்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனியவள அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் பெறவேண்டிய கனியவளங்களை அகழ்வு, போக்குவரத்து , வியாபாரம் மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெறாத 03 கம்பனிகளால் 2014 – 2017 வரையான காலத்தில் தங்கம் கலந்த 51 கொள்கலன் மண் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. தங்கம் அகழ்வதற்காக உரிய 03 கம்பனிகளால் செலுத்த வேண்டிய அரசிறை ரூபா 11,534,375 தொகை செலுத்தப்படாதிருந்ததுடன் அந்த அரசிறையை அறவீடு செய்வதற்காக அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு

2016 ஆம் ஆண்டிற்குரிய ஊழியர் ஊக்குவிப்புப் படியாக ரூபா 79,912,466 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1996 ஆகஸ்ட் 02 ஆந் திகதி திறைசேரி பிரதி செயலாளரால் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புப் படியொன்று செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறான ஊக்குவிப்புப் படி செலுத்துவதற்குரிய முறைமையொன்று தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊக்குவிப்புப் படிக்காக உரித்தாக்கப்பட்ட வேண்டியல்லாத தேறிய உழைப்புக்கள் ரூபா 199,851,558 தொகை ஊக்குவிப்புப் படி செலுத்தும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் ரூபா 99,925,779 ஊக்குவிப்புப் படி கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஊக்குவிப்புப் படி கணிப்பீடு செய்யும் அடிப்படையாக ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட 1 புள்ளியில் 0.75 புள்ளி செயலாற்றலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், செயலாற்றல் மதிப்பீடின்றி சகல ஊழியர்களுக்கும் 0.75 புள்ளி வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய 0.25 புள்ளிகள் சேமிக்கப்பட்ட வைத்திய விடுமுறைகளின் அளவின் பிரகாரம் விகித சமமாக வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எந்தவொரு செயலாற்றல் மதிப்பீடும் இன்றி சேமிக்கப்பட்ட விடுமுறைகளின் அடிப்படையில் மாத்திரம் ஊக்குவிப்புப்படி செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) ஊக்குவிப்புப்படி செலுத்துவதற்காக தகைமை பெற்ற தொகையிலிருந்து 20 சதவீதம் அதாவது ரூபா 20,562,846 தொகை அவசர இடர் நிதியத்தின் பெயரில் திறைசேரி அங்கீகாரம் கிடைக்காத நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போதும் 5 சதவீதமான ரூபா 3,823,565 தொகை இந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(v) ஊக்குவிப்புப் படியாக தேறிய உழைப்பில் 50 சதவீதமான ரூபா 101,475,313 தொகையைச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்த போதிலும், அந்த தேறிய உழைப்பைத் தீர்மானிக்கும் போது வருமானத்தில் 15 சதவீதமான பொது மேந்தலைச் செலவினத்தைத் தீர்மானிக்கும் அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) மீளாய்வாண்டில் ஊக்குவிப்புப் படியாக ரூபா 110 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vii) திறைசேரி அங்கீகாரமின்றி பணியகத்திற்கு இணைக்கப்பட்ட கம்பனியொன்றிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட 114 ஊழியர்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,449,500 தொகையான ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) யான்ஓயா நீர்த்தேக்க உத்தேசத் திட்டம்**

(i) யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்ட நிலத்தில் குவிந்த மணல் அகற்றப்பட வேண்டிய முறை தொடர்பாக முறையான திட்டமொன்றின் அடிப்படையில் செயற்பாடுகள், போட்டியாளர் மற்றும் திறந்த செயல்வழிகளின் மூலம் மணலை அகற்றுவதற்காக வாடிக்கையாளரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மணல் அகழ்வோருக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஒவ்வொரு அகழ்வுப் பிரதேசங்களுக்காகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினதும், 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனியவள அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரமும் தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பணியகத்தால் 126 அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(iii) அகழ்வு அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் அதிக எண்ணிக்கையில் அகழ்வாளர்களினால் மீறப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையோ அல்லது 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனியவள அதிகாரச்சட்டத்தின் 37(அ) பிரிவின் பிரகாரமோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனியவள அதிகாரச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடலை புனரமைக்கும் பொறுப்பை புறக்கணித்த அகழ்வாளர்களுக்கு எதிராக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் அதற்குரிய பணிகளை சரியான மேற்பார்வைக்கு உட்படுத்தி சுற்றாடலை புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) யான்ஓயா செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட 1,338,727 மண் கியூப் இற்காக அறவிட வேண்டிய ரூபா 26,774,540 தொகையான அரசிறை உரிய நிர்மாணக் கம்பனியிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 01 மணல் கியூப்பிற்காக காணப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட ரூபா 4,000 தொகையான சந்தை விலை 129/12/2016 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை மூலம் 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் ரூபா 8,000 வரை 100 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. அந்த அதிகரிப்பிற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சந்தை ஆய்வுத் தகவல்கள், கோரிக்கைகள் அல்லது அங்கீகாரம் எதுவும் கணகாய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மணலுக்காக நிர்ணயிக்கப்பட்ட சந்தை விலையாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அகழ்வு இடத்தின் போது விற்பனை விலை ரூபா 3,500 இற்கும் ரூபா 4,450 இற்கும் இடையாகக் காணப்பட்ட போதிலும் உரிய விலையாக ரூபா 8,000 நிர்ணயித்தல் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது.

(உ) பணியகத்துடன் இணைந்த கம்பனியால் அமுல்படுத்தப்படுகின்ற மணல் அகழும் 04 செயற்திட்டங்களுக்கு போக்குவரத்து அனுமதிப்பத்திரம் கையொப்பமிடுதல் உரிய கம்பனி ஊடாக ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

### 4.4 வெளிப்படையான மோசடிகள்

2014 ஆம் ஆண்டில் விடயப்பொறுப்பு அமைச்சரின் அறிவித்தலின் அடிப்படையில் பணியகத்தின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 11 மில்லியன் தொகை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நிறுவனமொன்றைத் தெரிவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் குழு சிபாரிசு செய்திருந்த நிறுவனத்திற்கு ரூபா 1,500,000 முற்பணம் செலுத்துவதற்கு 2014 திசெம்பர் 30 ஆந் திகதி தலைவர் அங்கீகரித்திருந்தார். அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 20 ஆந் திகதி பணியகத்தால் தலைவருக்கு காசாக முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. பணம் செலவிடப்பட்ட முறையோ அல்லது நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பாகவோ எந்தத் தகவலும் பணியகத்திடம் காணப்படாதிருந்ததுடன் 2018 யூன் 30 வரையிலும் முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 முறையாகக் கையேற்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்

2014 ஆம் ஆண்டின் பணியகத்தால் அனுராதபுரம் மாவட்ட செயலகத்திற்குரிய காணியொன்றில் ரூபா 4,040,144 செலவில் பிரதேச அலுவலகமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் பணியகத்திற்கு வழங்கப்படாமல் மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தால் உரிய கட்டிடம் மீளப் பெறப்பட்டிருந்தது.

### 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பணியகத்தின் வளங்கள்

2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக பணியகத்தின் இரண்டு புவிச்சரிதவியாளர்கள் 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதி முதல் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

---------------------------------------------

பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 445 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பதவியணியினர் 306 ஆகவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 139 ஆகவும் காணப்பட்டன. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வெற்றிடமாகக் காணப்பட்ட 17 வெளிக்கள உதவியாளர்கள் பதவிகள், 03 உதவி / பிரதி பணிப்பாளர் (நிதி) பதவிகள், 02 கணக்கு உத்தியோகத்தர்கள் பதவிகள் மற்றும் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவி என்பவற்றுக்காக மீளாய்வாண்டில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணியகத்துடன் இணைந்த கம்பனி ஊடாக ஒப்பந்த அடிப்படையில் 73 ஊழியர்கள் பணியகத்திற்குச் சேர்க்கப்பட்டு பதவிகளுக்குரிய தகைமைகள் பூர்த்தி செய்தமையை உறுதிப்படுத்தாமலும், மாதாந்தம் நிறைவேற்றிய பணிப்பொறுப்புக்களை உறுதிப்படுத்தாமலும், மாதாந்தக் கட்டணம் மற்றும் படியாக ரூபா 2,847,451 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த ஊழியர்களில் 37 பேர் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக மேலதிகமாக ஆம்சேர்க்கப்பட்டவர்களாகும்.

(இ) பணியகத்தின் பதிவாளர் / உதவி பதிவாளர் பதவியில் 04 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், உதவி பதிவாளராக ஒப்பந்த அடிப்படையில் 17 ஊழியர்களும், பணியகத்துடன் இணைந்த கம்பனி ஊடாக ஒரு உதவி பதிவாளரும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் 100 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது 168 பட்டதாரி பயிலுனர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். 2000 யூலை 19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 12/2000 இன் பிரகாரம் இந்த பயிலுனர்களுக்காக பொறுப்பு வாய்ந்த கடமைகள் கையளிக்க முடியாதிருந்த போதிலும், பிரதேச அலுவலகங்களிலும் பிரதான அலுவலகத்திலும் அலுவலக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(உ) நிதிப்பிரமாணம் 315 இன் பிரகாரம் சொத்துக்கள் பொறுப்பில் இருக்கக்கூடிய களஞ்சிய உத்தியோகத்தர் பதவிக்காக ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தர் அமைச்சரவை அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் 2016 முதல் 2018 யூன் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஊ) ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படாத 04 புவிச்சரிதவியலாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பதவியொன்றான நிதி ஆலோசகர் பதவிக்காக பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமும் திறைசேரியின் அங்கீகாரமும் இன்றி நிதி ஆலோசகரொருவர் 06 மாத காலத்திற்காக சேர்க்கப்பட்டிருந்தார். ஆலோசகருக்கு பணிகள் கையளிக்கப்படாதிருந்ததுடன் நிறைவேற்றப்பட்ட கடமைகள் தொடர்பான அறிக்கையும் காணப்படவில்லை. பணிப்பாளர் நிதி பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தர உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கும் போது நியமிக்கப்பட்ட இந்த நிதி ஆலோசகருக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி மாதாநதம் ரூபா 63,000 வீதம் ரூபா 378,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஏ) பணிப்பாளர் (நிதி) பதவி**

(i) 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் (நிதி) பதவிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் கல்வித் தகைமைகள் மற்றும் சேவை அனுபவங்கள் தொடர்பாக நிபந்தனைகள் விரிவாகவும் குறித்துரைத்தபடியும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக பிரசுரிக்கப்பட்ட செய்திப் பத்திரிகை அறிவித்தல்களில் தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் காண்பிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் மாற்றப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நேர்முகப் பரீட்சையின் போது வழங்கப்பட வேண்டிய புள்ளிகள், மேலதிக தகைமைகள் மற்றும் மேலதிக அனுபவங்களுக்காக 30 புள்ளிகள் வீதமும், ஏனைய வெற்றியாளர்களுக்காக 15 புள்ளிகளும் மற்றும் நேர்முகப்பரீட்சையின் போது செயலாற்றலுக்காக 25 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு பொருட்ளின் கீழான பல்வேறு துறைகளுக்காக கருத்தில் கொள்ளப்படுகின்ற நியதிகள் மற்றும் புள்ளிகள் ஒதுக்கப்பட்ட முறை, முன்னர் தீர்மானிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை புள்ளி வழங்கும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) ஆட்சேர்த்தல் நடைமுறையின் பிரகாரம் பணிப்பாளரை (நிதி) பதவிக்கு 13 வருடங்கள் சேவை அனுபவமொன்று காணப்பட வேண்டியிருந்த போதிலும் ஆட்சேர்க்கப்பட்டிருந்த விண்ணப்பதாரர் 05 வருடங்கள் சேவை அனுபவத்தை மாத்திரம் பெற்றிருந்தார்.

## 4.8 வாகனப் பயன்பாடு

அமைச்சிற்குச் சொந்தமாக 48 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், நியமிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 33 ஆனமையின் காரணமாக வாகனங்கள் குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டன. 23 வாகனங்களுக்கு சாரதிகள் நியமிக்கப்படாமையின் காரணமாக அவற்றின் பொறுப்புக்கள் எந்தச் சாரதிக்கும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த பணிகளுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகள் அடையப்பட வேண்டிய கட்டங்களையும் இலக்குகள் அடையப்பட்டதா என அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை என்பன 2018 மே 31 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட 04 பேர்களையுடைய நிரந்தர உதவியாளருடன் கணக்காய்வு பதவியணியினர் நியமிக்கப்படாதிருந்ததுடன் 04 சாதாரண எழுதுவினைஞர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) நிதிப்பிரமாணம் 133(2) இன் பிரகாரம் பணியகத்தின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் முறையாக உள்ளக்க கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் புவிச்சரிதவியல் பிரிவில் 02 அலகுகளும், மனிதவள முகாமைத்துவப் பிரிவில் 11 செயற்பாடுகளும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அவை கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய புவிச்சரிதவியல் பிரிவிற்குரிய 11 பரிசோதனை பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளகக் கணக்காய்வை வெளிப்படுத்துவதற்காக அந்தந்தப் பிரிவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தில், ஆலோசனைச் சேவை மற்றும் மூலதனமற்ற பொருட்கள், பெறுகையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட மூலதனப் பொருள் பெறுகைத் திட்டத்திற்காகவும் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்படாதிருந்ததுடன் திட்டத்தை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட வேண்டிய ரூபா 385,000,000 தொகையான 03 பெறுகைச் செயற்பாடுகள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 182,813,000 தொகையான 06 பெறுகைச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்தை மீளமைக்கும் பொறிமுறையில் அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான முறைமை ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு நான்கு வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்ட ரூபா 1,505,000 தொகை நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய முறையை தாபித்தல் 2018 யூன் வரை இடம்பெறவில்லை. இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 27 சதவீதம் முதல் 218 சதவீதம் வரையிலும், பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும், உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 12 சதவீதம் முதல் 1203 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பணியத்தால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2018 யூன் மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் 04 உத்தியோகத்தர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றதன் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டாய சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாமல் சேவையிலிருந்து விலகியமையின் காரணமாக அறவிட வேண்டிய தண்டப்பணம் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 2,459,663 தொகையினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது எடுக்கப்பட்டிக்கவில்லை.

(ஆ) முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஒருவர் பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 597,231 பெறுமதியான உபகரணங்கள் களஞ்சியப் பதிவேடுகளில் பிழையான வகையில் பதிவு செய்யப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும், உரிய தவறு மீளாய்வாண்டின் போதும் சீரமைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபற்றிய பணியகத்தின் 09 உத்தியோகத்தர்களுக்கு 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சு சுற்றறிக்கையின் 6(iii) ஆம் பிரிவிற்கு முரணாக தீர்மானிக்கப்பட இணைந்த படிகளை விஞ்சி ரூபா 469,300 தொகையொன்று 2015 ஆம் ஆண்டின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் இப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கனிய மணல் ஏற்றுமதி செய்யும் அந்த மணலின் கப்பல் வரை இலவசம் (எப்ஓபீ) பெறுமதி அடிப்படையில் 7 சதவீத அரசிறை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் தனியார் கம்பனியால் கனிய மணல் ஏற்றுமதி செய்யும் போது உரிய கப்பல் வரை இலவசம் பெறுமதி பிழையாக கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக அரசிறை குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கண்டறிந்து சரியான பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டில் சேவை பெறுவோருக்காக கொள்வனவு செய்யப்பட்டு அவரினால் மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 964,300 பெறுமதியான சொத்துக்கள் பணியகத்தின் சொத்தாக கணக்கீடு செய்தல் மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.7 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கனியவள அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அனுமதிப்பத்திரத்தில் அகழ்வு நிலத்தை மீளமைப்பதற்கான நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அகழ்வு நிலத்தை மீளமைப்பதற்காக அனுமதிப்பத்திரதாரரின் உடன்பாட்டிற்கான வங்கி பிணையும் பணியகத்தால் பெறப்பட்டிருந்தது. எனினும், அனுமதிப்பத்திரதாரர்கள் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியிருந்ததுடன் வங்கி பிணை முறியை பெற்று அல்லது நிலத்தை மீளமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிக்கவில்லை. இதன் போது நிபந்தனைகளை மீறிய அனுமதிப்பத்திரதாரர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், கறுப்பு பட்டியலில் உள்ளடக்கி அனுமதிப்பத்திரம் மீண்டும் வழங்குதலை நிராகரிப்பதற்கும் பணியகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மேற்கொள்கின்ற கனிய வளங்கள் அகற்றல்களின் காரணமாக மிக மோசமான சூழல் மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகள் எழுந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான கனியவள அகழ்வுகளை தடுப்பதற்காக பணியகத்தால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) சில புத்தகங்கள் பேணப்படாமை. |
| | (ii) சில இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் கொள்கைகள் பின்பற்றப்படாமை. |
| | (iii) நாட்குறிப்புப் பதிவுகள் அங்கீகரிக்கப்படாமை |
| (ஆ) ஆய்வுகூட அறிக்கை விநியோகித்தல் | அறிக்கை விநியோகிக்கும் முறைமை குறித்துரைக்கப்பட்ட மற்றும் எழுத்து மூலம் பேணிச் செல்லல் மற்றும் உரிய பிரிவிற்கு அறிவிக்கப்படாமை. |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) கனியவள போக்குவரத்து தொடர்பான தீர்மானம் எடுத்தல் பணிப்பாளர் நாயகத்தால் எடுக்கப்படாமை. |

| | | |
|---|---|---|
| | | (ii) பதவிகளுக்காக கிடைக்கின்ற வருமானம் தொடர்பாக பதிவேடொன்று பேணப்படாமை. |
| (ஈ) | சில்லறைக் காசு கட்டுநிதியின் பாவனை | பிரதேச அலுவலகங்கள் சில்லறைக் காசு கட்டுநிதியை பயன்படுத்திய மாதாந்த பற்றுச்சீட்டு தீர்க்கப்படாமை |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | (i) பதவிகளுக்காக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் தொடர்பாக பதிவதற்கு பதிவேடொன்று பணிப்பாளர் நாயகத்தால் பேணப்படாமை. |
| | | (ii) பணிப்பாளர் (நிதி) பதவிக்காக ஆட்சேர்க்கும் போது விண்ணப்பதாரருக்கு புள்ளிகள் வழங்குதல் வெளிப்படையாகக் காணப்படாமை. |
| (ஊ) | வாகனக் கட்டுப்பாடு | (i) நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் வாகன சம்பவத் திரட்டு பத்தகம் நாளதுவரையாகப் பேணிச் செல்லப்படாமை. |
| | | (ii) நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த ஓட்டப்பொழிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| | | (iii) அம்பாறை மற்றும் களுத்துறை பிரதேச அலுவலகங்களின் கடமைகளுக்காக வழங்கப்பட்ட 02 வாகனங்களில் சில ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமை. |
| | | (iv) ஓட்டக் குறிப்பின் பிரகாரம் அம்பாறை மற்றும் களுத்துறை பிரதேச அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட வாகனத்திற்குரிய பிரயாணங்கள், கடமை பிரயாணங்கள் என உறுதிப்படுத்தப்படாமை. |
| | | (v) வாகன பழுதுபார்த்தலுக்காக கராஜ் பதிவு செய்யப்படாமை. |